

# பனிமயம்

ஆகஸ்டு 2023

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-




தங்கத்தேர்ச்
சிறப்பிதழ்

3





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

இதோ, ஆகஸ்ட் மாதம் பிறந்துவிட்டது. நம் அன்பின் தாயைப் பொற்தேரில் பவனியாய் அழைத்து வந்து, அந்தத் தாயின் அன்புப் பிள்ளைகள் நாங்கள் என்பதை அனைவருக்கும் பறைசாற்றும் நாளும் வந்துவிட்டது. “நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் உடன்படிக்கையின் தூதர் இதோ வருகிறார்” (மலா 3:1) என்ற இறைவாக்கிற்கேற்ப, புதிய உடன்படிக்கையின் பேழையான நம் அன்னையை நகர்வலமாய்க் கொண்டுவரப் போகிறோம்.

இந்நிகழ்ச்சியை நேரில் காண்பதற்காகவே வெளியூர்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் மரியன்னையின் எண்ணற்ற பிள்ளைகள் தூத்துக்குடிக்கு வரவிருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறோம். பொற்தேர்ப் பவனியை நேரில் காண இயலாதவர்களுக்காக பெருவிழா நாளான 05.08.2023 சனி அன்று காலை 07.00 மணிக்கு கர்தினால் பிலிப் நேரி அவர்களின் தலைமையில் நடைபெறும் பெருவிழாத் திருப்பலியும், அதைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் தங்கத் தேர்ப் பவனியையும் நமது மாதா தொலைக்காட்சியில் காலை 07.00 முதல் 09.00 மணி வரையில் நேரலையாகக் காணலாம். முழுப் பவனியையும் வேறு தொலைக்காட்சியில் ஒளிபரப்பவும் முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

“கிறிஸ்துவோடு இணைந்து வாழும் எங்களைக் கடவுள் கிறிஸ்துவின் **வெற்றிப் பவனியில்** பங்கு கொள்ளச் செய்து எங்கள் வழியாய்த் தம்மைப்பற்றி யாவரும் அறியச் செய்கிறார்; இவ்வறிவு நறுமணம் போல் எங்கும் பரவுகிறது. இவ்வாறு செய்யும் கடவுளுக்கே நன்றி உரித்தாகுக!” (2 கொரி 2:14) என்னும் பவுலடியாரின் அனுபவமே நம் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

நம் அடைக்கலத் தாயான பனிமய அன்னை நமக்காகப் பரிந்து மன்றாடுவாராக!



என்றும் அன்புடன்,
**அருள்பணி. குமார்ராஜா**
பங்குத் தந்தை & திருத்தல அதிபர்

உதயம் 23 தாரகை 12

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### உலக இளையோர் நாளுக்காக...

இளையோர் தம்முடைய சொந்த வாழ்வில் நற்செய்தியை வாழ்வாக்கிச் சான்று பகர்ந்திட, லிஸ்பனில் நடைபெறும் உலக இளையோர் நாள் உதவும்படியாக மன்றாடுவோம்.

# உள்ளே...

## தங்கத்தேர்ச் சிறப்பிதழ் 3

1. சமத்துவத்தின் தாய் நம் பனிமயத்தாய் ....4
அருள்பணி. வெனி இளங்குமரன்

2. மிகவும் இரக்கமுள்ள தாயே ....6
அருள்பணி. சைமன் ஆல்டஸ்

3. மும்முறை வாழ்த்துப் பெற்ற அன்னை மரியா! ....8
சகோ. தோமினிக்கா

4. அருள் பொழியும் பனிமயத் தாய் ....10
கமலஜோதி ஜெயசீலன்

5. மாண்புயர் ஏழு தூண்கள் ....12
சகோ. ஆல்ட்ரின்

6. தங்கத் தேர் கவிதைகள் ....14

7. தங்கத் தேர்ப் பெருவிழா தொடர்பான அறிவிப்புகள் ....15

8. தங்கத் தேர் 2023 மைல் கற்கள் ....16

9. விவிலியப் போட்டி ....18

10. பனிமயப் பகிர்வு ....21

11. பனிமய சாட்சியம் ....25

# சமத்துவத்தின் தாய் நம் பனிமயத்தாய்

**நூற்றாண்டு விழா கா**ணும் தூத்துக்குடி மறைமாவட்டதிலுள்ள பொத்தக்காலன்விளை திருக்கல்யாணத் தாயின் திருத்தலத்தில் வெளியிடப்பட்ட ஒரு பாடலில் பின்வரும் வரி இடம்பெறுகிறது. 'கானாவூர் திருமணத்தில் சமத்துவத்தின் அடித்தளத்தில் புதுமை நிகழச்செய்ய பரிந்துரைத்தாயே!'. அது என்ன சமத்துவத்தின் அடித்தளத்தில் புதுமை? என்ற வினாவை சிலர் எழுப்பினர்.

கானாவூரில் திருமணம்; தாயும் மகனும் சீடர்களோடு அங்கே; அமர்த்தப்பட்ட மதிக்கத்தக்க முதல் விருந்தினர் அனைவரும் கொடிமுந்திரிச்சாறு உட்பட உணவு வகைகளை அருந்தினர். கடைசிவரை காத்து நின்ற ஏழைகள் குமுகத்தில் ஒதுக்கப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் ஆகியோர்க்கு 'இரசம் இல்லை'. இதை எவரும் பொருட்படுத்தவும் இல்லை.

அன்னை மரியாவின் கண்கள் அறிவு, பரிவு, துணிவு, பணிவு கொண்டு காண்கின்றன. தன் மகன் இயேசுவிடம் பரிந்துரைக்கின்றார்; "இரசம் தீர்ந்துவிட்டது" "அம்மா, அதைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே" என்கிறார் இயேசு. "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்று நம்பிக்கை விண்மீனாக வழிகாட்டுகிறார் தாய் மரியர் புதுமை நடக்கிறது.

"எல்லாரும் நல்ல திராட்சை இரசத்தை முதலில் பரிமாறுவர். யாவரும் விருப்பம் போல் குடித்த பின்தான் தரம் குறைந்த இரசத்தைப் பரிமாறுவர். நீர் நல்ல இரசத்தை இதுவரை பரிமாறாமல் ஏன் வைத்திருந்தீர்?" என்று பந்தி மேற்பார்வையாளர் எழுப்பிய கேள்வியில், "புலி எட்டடி பாய்ந்தால் குட்டி



பதினாறடி பாயும்” என்னும் தமிழ்ப் பழமொழி மிளிர்கிறது.

எல்லாருக்கும் கிடைத்தது போன்று, ஒடுக்கப்பட்ட ஒதுக்கப்பட்ட ஏழைகளுக்கும் நல்ல இரசம் கிடைக்க வேண்டும் என்று நம் தாய் சமன்மையை (சமத்துவம்) அடித்தளம் ஆக்கினார். இரசம் மறுக்கப்பட்டோருக்கு இடஒதுக்கீட்டுச் சமத்துவத்தின் அடித்தளத்தில் தரம் உயர்ந்த இரசம் கொடுக்கிறார். அவர்தம் சீடரும் அவரிடம் நம்பிக்கை கொள்கின்றனர்.

சிலுவையில் உயிரீகம் செய்து கொண்டிருந்த நேரத்தில் “அம்மா, இவரே உம் மகன்” என்று இயேசு மொழிந்து தன் தாயை உலக மாந்தர் அனைவருக்கும் தாயாக்குகிறார். அன்னை மரியா ஏற்கிறார்; சமன்மைத் தாயாகிறார்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் (69)

கல்வாரியில் நம்மைப் பிள்ளைகளாகப் பெற்றெடுத்த நம் தாய் நம்மைத் குறித்து பெரிதும் மகிழ வேண்டும். ‘என் தாய் யார்?, விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் உடன்பிறப்புகளும் தாயும் ஆவார்’ என்கிறார் இயேசு. எல்லாரும் இயேசுவுக்குத் தாயாகலாம் என்ற உயரிய திட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தன் தாய்மைப் பேற்றைப் பகிர்ந்து வழங்குகிறார் தாய்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான் (972)

பிறப்பு எல்லார்க்கும் சமமே. எனவே, எல்லா உயிர்களும் சமமே. செய்யும் தொழில்களிலும் கொண்டிருக்கும் பண்புகளிலும் திறன்களிலும் வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் பிறப்பால் ஏற்றத் தாழ்வுகளையும் தீண்டாமை இழிவுகளையும் திணிப்பது இறையாட்சிக்கு முரணானது. இறை அன்னைக்கு எதிரானது. காரணம், நம் தாய் சமத்துவத்தின் தாய்.

இந்தியத் துணைக்கண்டத்தில் ஆரியர்களின் படையெடுப்புக் காலந் தொட்டு மூவாயிரம் ஆண்டுகாலமாக சமத்துவத்தைச் சாதிய இழிவு சிதைத்து வருகிறது.

கடவுள் நம் அனைவருக்கும் தந்தை. ஒரே கடவுள், ஒரே தந்தை. பின் எப்படி பல சாதிகள்? கடவுளின் தலையிலிருந்து பிராமணர்களும் தோளிலிருந்து சத்திரியர்களும் தொடையிலிருந்து வைசியர்களும் கால் பாதத்திலிருந்து சூத்திரர்களும், இவ்வமைப்பு முறையை எதிர்த்தெழுந்த பஞ்சமர்கள் கடவுளின் கால்பட்ட தூசியிலிருந்தும் படைக்கப்பட்டனர் என்பது உண்மைக் கடவுளை ஏற்காதோரின் கூற்று; கடவுள் ஆள்பார்த்துச் செயல்படுவதில்லை (திப 10:34) என்ற உண்மையை உணராதவர்களின் கருத்து.

ஒரே உடலின் உறுப்புகள் நாம் என்கிறார் பவுல். “இனி, உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும் அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை, ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை” (கலா 3:28).

பனிமயத் தாயின் பிள்ளைகள் நாம் ஒன்றாகவும் சமமாகவும் இருந்து பிறர் உங்களைவிட மதிப்புக்குரியவர் என எண்ணும் (உரோ 12:10) பணிவு மனநிலை கொண்டு சான்று பகர வேண்டும். தாய் மரியா எலிசபெத்தைச் சந்தித்துப் பணிவிடை புரிய முற்பட்டபோது என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? என்றுரைத்தது போன்று நம்மைக் குறித்தும் நல்லோர் எண்ண வேண்டும். தங்கத் தேரிலிருக்கும் பனிமயத்தாய் நம்மைப் பார்த்துப் புன்னகைக்க வேண்டும். அப்போது நாம் தாயைப் போல பிள்ளை என்று உயர்வோம். சமத்துவத் தாயின் பிள்ளைகளாகவே வாழ்வோம்.



**அருள்பணி.**
**வெனி இளங்குமரன்**

# மிகவும் இரக்கமுள்ள தாயே

"இறக்கத்தான் பிறந்தோம் அதுவரை இரக்கத்தோடு இருப்போம்" என்பது புனித அன்னை தெரசா அவர்களின் அமுத மொழிகள். இந்த உலகிலேயே இறைவனுக்கு அடுத்தபடியாக அதிக இரக்க குணம் உடையவர்கள் நம்மை பெற்ற அன்னையர்தான். தன்னுடைய பிள்ளைகளை எந்த வகையிலும் விட்டுக்கொடுக்காத, தன்னை அவர்கள் வெறுத்தபோதிலும் அவர்கள்மீது என்றும் மாறாத பாசமும் அளவு கடந்த இரக்கமும் உடையவர்கள் நம்முடைய அன்னையர்.

அந்த அன்னையர்களைப் போல அல்லது அந்த அன்னையருக்கெல்லாம் மேலாக நம்மீது இரக்கம் கொண்டிருப்பவர் நம்முடைய பனிமய அன்னை. கடல் கடந்து வந்த நாள் முதல் இன்று வரை நம்மீது அளவு கடந்த அன்பும் இரக்கமும் கொண்டு திருத்தலத்தில் கொலு வீற்றிருக்கிறார். தேடி வருவோருக்கெல்லாம் தஞ்சமும் ஏக அடைக்கலமுமாய் இருக்கிறார் நம் அன்னை.

நம் இரக்கமுள்ள தாய் தனது பாடலில் இவ்வாறு கூறுகிறார், "அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்" (லூக் 1:50-53). கடவுளுடைய இரக்கம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. இருந்த போதிலும் யாரெல்லாம் அவருக்க் அஞ்சி செயல்படுகிறார்களோ அவர்கள் கடவுளின் இரக்கத்தை முழுமையாக பெறுவர். நம் அன்னை கடவுளின் திட்டத்திற்கு கீழ்ப்படிந்து (அடிபணிந்து) இறைத்திட்டத்தில் இணைந்தார். எனவே கடவுளின் இரக்கத்தை நிறைவாக பெற்றார். அந்த இரக்கத்தை பெற்றவராக மட்டுமல்ல அதை மற்றவர்களுக்கு கொடுப்பவராகவும் விளங்குகிறார். "கடவுளின் இரக்கம் என்பது அன்னை மரியா வழியாக கடந்து வருகிறது" என்கிறார் புனித பவுஸ்தீனா.

"அன்னை மரியா இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவரது உள்ளமானது தாய்மைக்குரிய **கனிவோடும் இரக்கத்தோடும்** இருந்தது. அதனால் அன்னை மரியா



இவ்வுலகில் வாழந்தபோது தன்னுடைய பிள்ளைகளுக்காக பட்ட வேதனையைப் போல, வேறு யாரும் வேதனையை அனுபவித்திருக்க முடியாது” என்கிறார் புனித ஜெரோம்.

அந்தக் கனிவும் இரக்கமும்தான் அவரை தேவையிலிருப்போரை தேடிச் செல்ல வைத்தது. அவர்கள் கேட்காமலேயே ;அவர்களுக்கு உதவி செய்தது. அன்று கானாவூர் திருமண வீட்டிலும் சரி, தம் உறவினரான எலிசபெத் இல்லத்திலும் சரி தேவையை குறிப்பால் கண்டுணார்ந்து இரக்கக் குணத்தோடு செயல்பட்டார் நம் அன்னை.

இந்த இரண்டு நிகழ்வுகளிலும் அவர் உதவி செய்ய வேண்டிய அவசியம் இல்லை, ஆனால் அவரின் இரக்கக் குணம் அவரை உதவி செய்ய வைத்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக அவரது இரக்கக் குணம் வெளிப்பட்டது எருசலேம் தேவாலயத்தில் தான். “உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும்” என்று சிமியோன் சொன்னபோதும்கூட அவர் எந்த மறுப்பும் எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. காரணம், மக்களை பாவத்திலிருந்தும் துன்பத்தில் இருந்தும் மீட்கப் போகிறவர் மெசியா என்னும் இயேசு என்பதை அவர் உணார்ந்திருந்தார். அந்த இறைவனின் இரக்கச் செயலில் அல்லது மீட்புச் செயலில் தன்னையும் இணைத்துக் கொண்டார். தன்னை முழுவதுமாக இறைவனுக்கு கொடுப்பதிலும் தன் மகனை இறைவனுக்கு கையளிப்பதிலும் முனைப்போடு செயல்பட்டார் நம் அன்னை.

இயேசு இரக்கத்தின் ஊற்றாக இருக்கிறார், மரியா இரக்கத்தின் மறுஉருவாக இருக்கிறார். தேவையிலிருப்போருக்கு உதவுவதும், நோயாளர்களைச் சந்திப்பதும், இறந்தோரை அடக்கம் செய்வதும், ஆடையில்லாதோருக்கு ஆடை உடுத்துவதும் தனிமையில் வாழ்வோரை கவனித்துக் கொள்வதும் ஆதரவற்றோருக்கு இருக்க இடம் கொடுப்பதும்தான் ஒரு சமூகத்தில் இரக்கச் செயலாக பார்க்கப்படுகிறது.

இவற்றையெல்லாம் அன்னை மரியா செய்தார், மற்றவர்களை செய்ய வைத்தார், இன்றும் செய்து கொண்டிருக்கிறார். இன்று இறைமகனிடம் நமக்காக பரிந்துப் பேசிக் கொண்டிருக்கிறார். ஆகவேதான் புனித பெர்னதெத் செபித்த இறைவேண்டல் இவ்வாறு அமைகிறது, “உம்முடைய உபகார சகாயங்களை இரந்து உம்முடைய மன்றாட்டுகளின் உதவியை கேட்ட ஒருவராகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகில் சொல்ல கேள்விப்பட்டதில்லை”.

அன்னையை நம்பினோர் ஒருபோதும் அவலமாய் போகமாட்டார் என்பது நாம் கண்கூடாக காணும் உண்மை. அன்னையின் எல்லா காட்சிகளும் அவர் மானுடத்தின்மீது கொண்ட அளவற்ற அன்பையும் இரக்கத்தையும் எடுத்தியம்புகிறது என்பது மறுக்கமுடியாத உண்மை. பாவிகள் மனம் திரும்பவும் எல்லோரும் இறைவனின் இரக்கத்தை பெற்றுக் கொள்ளவும் செபிக்குமாறு அன்னை தன் காட்சிகள் மூலம் கேட்டுக் கொண்டார்.

அன்னை இரக்க மிகுந்தவராய் இருப்பதுபோல அவருடைய பிள்ளைகளாகிய நாமும் இரக்கக் குணத்தோடு வாழ வேண்டும் என்பது அன்னையின் எதிர்பார்ப்பு. இரக்கத்தின் ஊற்றாக இருக்கக்கூடிய அன்னையிடம் நம்மையும் நம் குடும்பத்தையும் ஒப்புக்கொடுப்போம். அவரின் வழியாக இறைஇரக்கத்தை பெறுவோம்.

இரக்கமுள்ள அன்னையே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.



**அருள்பணி. சைமன் ஆல்டஸ்**

# மும்முறை வாழ்த்தப் பெற்ற அன்னை மரியா!



"கிறிஸ்துவை அறிய வேண்டுமா? அன்னை மரியாளிடம் செல்லுங்கள்" என்றார் திருத்தந்தை ஆறாம் பவுல். ஆம், அன்னை மரியாவை நெருங்க, நெருங்கத்தான், ஆண்டவர் இயேசுவை நாம் முழுமையாக அறியமுடியும் என்பதே கத்தோலிக்கர்களின் ஈராயிரம் ஆண்டு அனுபவமாக இருக்கிறது. எனவே, அன்னையின் ஆளுமையையும், ஆன்மிகத்தையும் எவ்வளவுக்கு நன்றாக அறிகிறோமோ, அவ்வளவுக்கு நமது கிறித்தவ ஆளுமையும், ஆன்மிகமும் அதிகரிக்கும். இந்தக் கோணத்தில் மும்முறை பேறுபெற்ற நம் அன்னையின் வாழ்வை சற்று ஆய்வு செய்வோம்.

அன்னை மரியா அகிலத்தின் தாய். தந்தை கடவுளின் சிந்தையில் உதித்த மூன்றாம் நபர். இறைத்திட்டம் நிறைவேற்ற "ஆம்" என அடிபணிந்து, வார்த்தையை வயிற்றினில் சுமந்து, உயிர்துறந்து மானுடத்தை மீட்டெடுக்க மனுமகனை ஈன்றெடுத்தவர். மனுக்குலத்திற்குத் தன் மகனைத் தாரை வார்த்து மனித குலத்தின் அன்புத் தாயானவர்.

இந்த அன்னையின் அன்பை அளவிட அளவுகோல் இல்லை. அவரது அன்பை மட்டம் தட்ட எவருக்கும் அருகதை இல்லை. மீட்புத் திட்டத்தில் இருந்து அன்னை மரியாவைப் பிரித்துப் பார்க்க எவருக்கும் தகுதியும் இல்லை.

இத்தகைய அரும்பெரும் அன்னையை விவிலியத்தில் மூன்று பெண்கள் பேறுபெற்றவர்கள் என வாழ்த்தியுள்ளனர்.

இது அன்னை மரிக்கு மிகவும் பொருத்தமான வாழ்த்து என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**1. முதல் வாழ்த்தை வழங்கியவர் எலிசபெத்.** அன்னையைப் பேறுபெற்றவர் என வாழ்த்திய முதல் பெண் **எலிசபெத்**. இவர் தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்" (லூக். 1:42) என வாழ்த்தினார். மேலும் அன்னை மரியாவை நோக்கி, "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" (லூக். 1:45) என உளம் மகிழ்ந்து உரக்க அறிக்கையிட்டார். அன்று அன்னை மரியா தூதனின் வாழ்த்துரை கேட்டுக் கலங்கி இந்த வாழ்த்து எத்தகையதோ என்று எண்ணியபொழுது கடவுளின் வாக்கு நிறைவேறும் என ஆழமாக நம்பினார். அவரது ஐயமில்லா நம்பிக்கையால், ஆழமான விசுவாசத்தால் பேறுபெற்றவர் என எலி சபெத்தால் வாழ்த்தப் பெற்றார்.

**2. இரண்டாம் வாழ்த்தை வழங்கிய தூய ஆவியார்.** இரண்டாவதாக அன்னை மரியாவை; பேறுபெற்றவர் என வாழ்த்திய பெண் **அன்னை மரியா**தான் என்பது நமக்கு வியப்பைத் தரலாம். ஆம், "இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக். 1:48) என்று அகமகிழ்ந்து பாடினார் மரியா.

இது வியப்பாகத் தோன்றினாலும், உண்மையில் இந்த வாழ்த்து தூய ஆவியாருக்கே சொந்தமானது. தூய ஆவியாரின் தூண்டுதலால்தான் அன்னை மரியா ஆண்டவரைப் புகழ்ந்து பாடினார். அன்னையே தன்னைப் பேறுபெற்றவள் என பாடியது மிகப் பொருத்தமானதே. ஏனெனில் பெண்களைத் தாழ்வாகக் கருதிய யூத நிலத்தில் மரியா கடவுளின் இரக்கப் பார்வையால் உயர்த்தப் பெற்று, இறைவனுக்குத் தாயாகும் பேற்றினைப் பெற்றார்.

இந்த உன்னத நிலைக்காக மரியா தேர்ந்தெடுக்கப்படவில்லை. மாறாக இதற்காகவே அவர் படைக்கப்பட்டார். இம்மாபெரும் மறைபொருளை எண்ணித்தான் அன்னை மரியா, "தலைமுறையினர் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக். 1:48) என்று பாடினார். இன்றும் மனித குலம் அன்னையைப் பேறுபெற்றவர் என வாழ்த்துவது அன்னையின் வார்த்தைக்கு மிகப் பெரிய சான்றாகும். ஆகவே அன்னையின் வாக்கு சாலச்சிறந்த வாழ்த்து.

**3. மூன்றாம் வாழ்த்தை வழங்கிய பெண்.** அன்னை மரியாவைப் பேறுபெற்றவர் என வாழ்த்திய மூன்றாவது பெண் கூட்டத்தில் அமர்ந்து இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு மெய்மறந்து உண்மையை உணர்ந்து குரலெழுப்பியவர். இறைவார்த்தையை இனம் கண்டுகொண்ட அவர், "உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்" (லூக் 11:27) என குரலெழுப்பிக் கூறினார்.

இறைவனையே கருத்தாங்கிப் பெற்றெடுத்து, பாலூட்டி வளர்க்கும் பேறுபெற்ற ஒரே பெண் அன்னை மரியா. இவர் வார்த்தையை உடலில் சுமக்கும் முன் தன் இதயத்தில் சுமந்து, அதற்கு வாழ்வால் உருக்கொடுத்தவர். ஆகவே "இறைவார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்" (லூக் 11:28) என்ற இயேசுவின் வார்த்தைகளுக்கு ஏற்ப அன்னை மரியா இன்னும் அதிகம் பேறுபெற்றவரானார்.

உண்மையில், மரியா மும்முறை பேறுபெற்றவர் அல்லர், பன்முறை பேறுபெற்றவர் என்பதே விவிலியம் காட்டும் செய்தி. அந்த அன்னையின் வழிநடந்து நாமும் பேறுபெற்றவராவோம்.

கடவுளின் வல்லமையால் நிரப்பப்பெற்று பேறுபெற்றவர் என வையகம் புகழ்ந்தேத்தும் நம் தஸ்நேவிஸ் அன்னையை நாமும் நம் வாழ்வால் புகழ்ந்தேத்துவோம்.



**சகோ. தோமினிக்கா FBS**

# அருள் பொழியும் பனிமயத் தாய்



பனிமயத் தாயை எண்ணும்போதெல்லாம் என் உள்ளம் மகிழ்கிறது. நெஞ்சில் நன்றியுணர்வு பொங்கி வழிகிறது.

எல்லாருக்கும் அருள்மழை பொழியும் அந்தத் தாய் என் வாழ்விலும் எண்ணிலடங்கா நன்மைகளைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள்.

குழந்தைப் பருவத்திலிருந்தே மரியன்னை என் அன்புத் தாயாக இருந்து என்னை வழிநடத்தி ஆசிர்வதித்து வந்திருக்கிறார்கள். அந்தத் தாய்க்கு என் நன்றி.

எனது குழந்தைப் பருவத்தில் ஆலந்தலையில் நடந்த ஒரு நிகழ்வு என் மரியன்னைப் பக்திக்கு வித்திட்டது என்று சொல்ல வேண்டும்.

1960களின் இறுதியில் ஒருமுறை பாத்திமா மாதா சுரூபம் ஒவ்வொரு ஊருக்கும் அனுப்பப்பட்டது. எங்கள் ஊருக்கு வந்தபோது, அந்த அன்னையின் சுருபத்தைச் சுமக்கும் பேறு எனது அப்பாவின் காருக்குத்தான் கிடைத்தது.

என் அப்பா அந்தக் காரில் பாத்திமா அன்னையின் சுருபத்தை வைத்து, ஊர் முழுவதும் பவனியாக வந்து, இறுதியாக ஊரை விட்டுப் புறப்படும்போது, எங்கள் வீட்டின் முன்னால் ஒரு சில நிமிடங்கள் காரை நிறுத்தினார்கள். நாங்கள் எல்லோரும் மிக ஆர்வமாக பாத்திமா அன்னையின் திருச்சுரூபத்தை உற்று நோக்கி மகிழ்ந்தோம். செபித்தோம். அதுவே என் மரியன்னை பக்தியின் முதல் அனுபவம். அன்றிலிருந்து அன்னையின் மகளாக வாழத் தொடங்கி விட்டேன்.

குழந்தைப் பருவத்தில் நடந்த இன்னொரு அற்புதமான நிகழ்வும் என் நெஞ்சை விட்டு அகலாது இருக்கிறது. என் மாதா பக்திக்கு அச்சாரமாகத் திகழ்கிறது.

ஒருமுறை வெளியூரில் இருந்த என் தந்தையைப் பார்ப்பதற்காக என் அம்மா

என்னையும், எனது இரண்டு மூத்த சகோதரிகளையும் வீட்டில் தனியே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள். பகல் முழுவதும் தைரியத்தோடு இருந்த நாங்கள் மாலையானதும் துணிவை இழக்கத் தொடங்கினோம். அச்சம் எங்களை ஆட்கொள்ள மூவரும் பயந்துகொண்டே அன்னையை நோக்கி மன்றாடினோம்.

எங்கள் வீட்டின் சுரூபக் கூண்டில் அழகிய பாத்திமா அன்னையின் திருச்சுரூபம் ஒன்று இருந்தது. இயேசுவின் திரு இதய சுரூபமும், "தி ஆர்க்" என்று எழுதப்பட்ட பேழை ஒன்றும் இருந்தது. இந்த சுரூபக் கூண்டின் முன்பாக முழந்தாள்படியிட்டுத்தான் வழக்கமாக நாங்கள் செபிப்போம். அந்த நாளிலும் அன்னையின் திருச்சுரூபத்தை நோக்கி நாங்கள் பயத்துடன் செபித்தோம், கொஞ்சம் அழுகையும் வந்துவிட்டது.

அந்த நேரத்தில்தான் அந்த அதிசயம் நடந்தது. ஒரு கணப் பொழுதில் அன்னை மரியா எங்களுக்குத் தோன்றினார். ஒளிப் பிழம்பு அன்னையைச் சூழ்ந்திருந்தது. "பிள்ளைகளே, அழவேண்டாம். உங்க அம்மா வந்துவிடுவார்கள்" என்ற குரல் எங்களுக்குக் கேட்டது. ஒரு பக்கம் பயம், அதிர்ச்சி என்றால், இன்னொரு பக்கம் மிகப் பெரிய ஆறுதல். எங்கள் அழுகை உடனே நின்றுவிட்டது. ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்துகொண்டோம்.

சிறிது நேரத்தில் அம்மா வந்துவிட்டார்கள். நாங்கள் மூவரும் மகிழ்ச்சியில் அம்மாவைக் கட்டிக்கொண்டு அழுதோம். மாதாவைக் காட்சியில் கண்டதைச் சொன்னோம். அம்மாவும் பரவசம் அடைந்தார்கள். எல்லோரும் முழந்தாட்படியிட்டு மாதாவுக்கு நன்றி சொன்னோம். அந்த இரு சகோதரிகளுள் ஒருவர் பிற்காலத்தில் பிரான்சிஸ்கன் மறைபரப்பு சபையில் (FMM) சேர்ந்து துறவியாகி, துறவற வாழ்வில் பொன்விழாவும் கொண்டாடிவிட்டார்கள்.

மன அமைதியிழந்த நேரங்கள், கோபக் கனல் பொங்கும் வேளைகள், உணர்ச்சிவசப்பட்டுத் தள்ளாடும் தருணங்கள், தனிமை உணர்வுக்குள் தள்ளப்படும் பொழுதுகள் இத்தகைய நேரங்களில் மாதாவை நினைத்து மனமுருகி, மன்றாடி, புலம்பி, கண்ணீர் விட்டு அன்னையை நோக்குவேன். என்ன வியப்பு! அன்னை தரும் ஆறுதல் உடனடியாக என் மனதை நிரப்பும். உலகம் தரமுடியாத அமைதியும், ஆனந்தமும் என் நெஞ்சில் ஊற்றெடுக்கும். ஒளிமயமான ஒரு நீண்ட ஒளிக்கற்றை ஒரு நொடியில் தோன்றி மறைய மனதில் ஒரு பரவசம் ஏற்படும். இதோ, என் பனிமயத் தாய்! இத்தகைய ஆசி பொழியும் என் பனிமய அன்னையை ஒரு போதும் மறவேன். எந்நாளும் போற்றுவேன்.

என் வாழ்வின் பல வேளைகளில், அவசரமான நேரங்களில், புனித அன்னை தெரசா பரிந்துரைத்தவாறு, ஒன்பது முறை "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்னும் மன்றாட்டை செபித்து, அற்புதங்களை, அதிசயங்களைக் கண்டிருக்கிறேன். தொடர்ந்து என் வாழ்வு முழுவதும் அன்னையின் பராமரிப்பில்தான் வாழ்ந்து வருகிறேன்.

கடந்த ஆண்டு பனிமயத் தாயிடம் ஒரு விண்ணப்பம் செய்தேன். என்னே வியப்பு! ஆகஸ்ட் மாதம் 5ஆம் நாள் பனிமய அன்னையின் திருநாள் அன்று என் விண்ணப்பம் கேட்கப்பட்டது. நான் கேட்டது கிடைத்தது. மாதாவுக்கு நன்றி செலுத்தினேன்.

தொடர்ந்து என் வாழ்நாள் முழுவதும் அன்னையின் ஆசிகளைத் தொடர்ந்து பெறவேண்டும், அன்னைக்கு எந்நாளும் நன்றியுடன் வாழவேண்டும் என்பதே என் ஆவல்.



**கமலஜோதி ஜெயசீலன்**

# மாண்புயர் ஏழு தூண்கள்



'ஞானம் நிறை கன்னிகையே' என்ற பாரம்பரியமான மாதா பாடலை உள்ளம் உருகி நாம் பாடுவதும் செபிப்பதும் உண்டு. அப்பாடலில் **மாண்புயர் ஏழு தூண்களு**மாய் என்ற சொற்றொடர் இடம் பெறும். அந்த மாண்புயர் தூண்கள், கன்னிமரியா கொண்டிருந்த தலையான ஏழு நற்பண்புகளே ஆகும்.

ஏழு தலையான பாவங்களுக்கு மாற்றாக புனித தாமஸ் அக்குவினாஸ் தலையான ஏழு நற்பண்புகளை முன் வைக்கிறார். மரியன்னையும் இந்த ஏழு நற்பண்புகளையும் தூண்களாக பெற்றிருந்தார்கள். அவை தாழ்ச்சி, பொறுமை, கற்பு, தாராள குணம், அளவோடு உண்ணல், பிறரன்பு, சுறுசுறுப்பு ஆகும்.

தற்பெருமைக்கு எதிர்மருந்தாக இருப்பது **தாழ்ச்சி**. பனிமயத்தாய் விண்ணக மண்ணக அரசியாக அழகுடன் கொலுவீற்றிருப்பதற்கு முதற்காரணம் அவர்கள் தேர்ந்துகொண்ட அடிமை வாழ்வேயாகும். இங்கு அடிமை என்பது உரிமையற்ற, சுதந்திரமில்லா வாழ்வல்ல. மாறாக, முழு மனதோடும் முழு உள்ளத்தோடும் தன்னையே இறைத் திருவுளத்திற்கு கையளிப்பதாகும். "இதோ நான் ஆண்டவரின் அடிமை" (லூக் 1:38) என்ற மரியன்னையின் தாழ்ச்சி அவர்களை மிகவே உயர்த்தி விண்ணக மண்ணக அரசியாகவும் நம் அனைவருக்கும் தாயாகவும் திகழச்செய்கிறது. தாழ்ச்சி மரியன்னையை அரியணை ஏறச் செய்தது.

**பொறுமை** சீற்றத்திற்கான எதிர்மருந்தாகும். திருவிவிலியம் அன்னை மரியா அனைத்தையும் தன் உள்ளத்தில் இருத்தி சிந்தித்தார் என்று கூறுகிறது. குழந்தை இயேசுவை இடையர்கள் சந்தித்தபோதும், இயேசுவைக் கோவிலில் கண்டுபிடித்தபோதும் நடந்த நிகழ்வுகளை மரியா தம் உள்ளத்தில் இருத்தி சிந்தித்தார் (காண்க லூக் 2:19-25) என வாசிக்கிறோம். உள்ளத்தில் இருத்தி சிந்திப்பது என்பது பொறுமையோடு கவனித்தல்

என்பதன் வெளிப்பாடு. எருசலேம் திருவிழாவில் காணாமற்போன சிறுவன் இயேசுவைக் கண்டவுடன் மரியா அவர்மீது சீற்றம் கொள்ளாமல் இயேசுவையும் அந்நிகழ்வுகளையும் பொறுமையோடு ஏற்றுக் கொண்டார். பொறுமை நம் அன்னையின் பெருமை.

காமவெறி என்ற பாவத்திற்கு எதிரான நற்பண்பு **கற்பு**. கற்பு என்பது கற்புடன் வாழ்தல் மற்றும் உண்மைத்தன்மையோடு வாழ்தலாகும். மரியா கற்புக்கரசியாக வாழ்ந்தவர்கள். இதனை எசாயா இறைவாக்கினர் மரியாவின் பிறப்பிற்கு முன்பாகவே முன்னறிவிக்கிறார் (காண்க எசா 7:14). கற்பு என்பது உண்மையான வாழ்க்கையையும் குறிக்கிறது. மரியா தம் வாழ்வை இறைவனுக்கும், தமக்கும், சுற்றத்தாருக்கும் நேர்மையுடனும் உண்மையுடனும் நடத்தி வந்தார். அதனால்தான் உண்மையான இயேசுவை தன் உதிரத்தில் தாங்கினார். தாய்மை, கன்னிமை, உண்மை ஒன்றானது மரியன்னையிடம்.

பேராசையின் எதிர்மருந்து **தாராள குணம்**. தாராள குணம் என்பது இருப்பதை எல்லாம் மற்றவர்களுடைய நலனுக்காக தாராளமாக கொடுப்பதுவும், பல பொறுப்புகளை ஏற்று மற்றவர்களுக்கு உதவியாக இருப்பதுவுமாகும். மரியன்னை தான் பெற்று அமுதூட்டி வளர்த்த தன் ஒரே மகனையே உலக மீட்புக்காக கொடுத்தார். பின் சிலுவையடியில் நின்றபோது “இவரே உன் மகன்” (யோவா 19:26) என்று இயேசு கூறியதும் மனிதக்குலத்தை முழுவதுமாக தன் பிள்ளையாக ஏற்றுக் கொள்கிறார். இவ்வாறு மனிதக்குலத்தையே மீட்பின் பாதைக்கு எடுத்துச் செல்லும் பொறுப்பை தாராள மனதுடன் ஏற்றுக் கொள்கிறார். நம்மனைவரையும் பிள்ளைகளாக ஏற்பதற்கு மரியன்னையிடம் இருந்த நற்பண்பு தாராளகுணம்.

**அளவோடு உண்ணல்** என்பது அளவோடு இருத்தல் என்ற பொருளும் கொள்ளும். ஆசைக்கேற்ப இல்லாமல் தேவைக்கேற்ப வாழ்வது என்பது நற்பண்பாகும். அளவோடு இருத்தல் என்பது எளிமையான வாழ்க்கையைக் குறிக்கிறது. விவிலியத்தில் இயேசுவின் பிறப்பையொட்டிய நிகழ்ச்சிகள் அனைத்தும் மரியன்னை அளவோடு இருந்தார்கள் என்பதை காட்டுகிறது (காண்க லூக் 2:7). எளிமையான மாட்டுத் தொழுவத்தில் குழந்தை இயேசுவைப் பெற்றெடுத்தார்கள். எளிய வாழ்வு வாழ்ந்தார்கள். இந்நிகழ்வுகள் மரியன்னையின் அளவோடு இருத்தல் பண்பை காட்டுகிறது. அளவோடு இருத்தல் கடவுளோடு இருத்தலாகும்.

**பிறரன்பு** என்பது பொறாமையின் எதிர்ப்பதம். பொறாமை கொள்ளும் இதயம் பிறர் வளர்ச்சியை விரும்பாது. ஆனால் மரியன்னை பிறரன்பு கொண்டவர்களாக திகழ்ந்தார்கள். கானாவூர் திருமணத்தில் திராட்சை ரசம் தீர்ந்ததும் தன் மகனை புதுமை நிகழ்த்த வழி செய்தார்கள். மரியன்னை கொண்ட அன்பே அவர்களை இவ்வாறு செயல்படவும், இயேசுவின் முதல் புதுமையை ஆற்றவும் தூண்டுகோலாக இருந்தது. மரியன்னை பிறர்மீது கொண்ட அன்பை எலிசபெத்தம்மாளை சந்திக்கும் நிகழ்ச்சியிலும் காணலாம். பிறரன்பு மரியன்னையின் பண்பு.

இறுதியாக மரியன்னை கொண்டிருந்த நற்பண்பு **சுறுசுறுப்பு**. “அதன்பின் மரியா புறப்பட்டு யூதேயா மலை நாட்டிலுள்ள ஒரு ஊருக்கு விரைந்து சென்றார்” (லூக் 1:39). மரியா கருவுற்ற வேளையிலும் எலிசபெத்தம்மாளுக்கு உதவிசெய்ய விரைந்து செல்கிறார். விரைந்து செல்லுதல் என்ற சொல் மரியன்னையின் சுறுசுறுப்பை காண்பிக்கிறது.

தங்கத்தேரில் வலம் வரும் பனிமயத்தாய் அவர்கள் கொண்டிருந்த ஏழு நற்பண்புகளாகிய தூண்கள் வழியாக புண்ணிய வாழ்வு வாழ கற்றுக் கொடுக்கிறார்கள். தீமைகளிலிருந்து விலகி நற்பண்புகளை பற்றிக்கொண்டு ஞானம் நிறை கன்னிகையின் பரிந்துரையால் ஞானத்தோடு வாழ்வோம்.



**சகோ. ஆல்ட்ரின்**

தங்கத் தேர் 4 கவிதைகள்

# தேரில் வரும் தேவதையே...



மடலோடு வந்துள்ளேன்
கடலோடு இருப்பவளே...
மந்தநிலை போக்கிடு
சந்த மரியா...

பாலனை சுமப்பவளே
காலனை விரட்டிடம்மா.. உன்
காலணை நம்பி வந்தோம்....

தேர்வு முதல்
சோர்வு வரை.
கோர்வையாய் சொல்லினோம்...
தீர்வை நீ தந்திடம்மா...

கத்தையாய் துன்பங்கள்...
கந்தையாய் நாங்களே....
உந் தயை ஏங்கி நின்றோம்...

தேய்ந்தும் தான் போய்விட்டோம்...
தொய்ந்தும் தான் போய் விட்டோம்....
ஆய்ந்து நீ ஆதரிம்மா...

ஆழியில் முத்தெடுத்து
உனக்கு
ஆடியில் தேரிழுத்தோம்...
ஆதியில் ஆண்டவன் கண்டவளே...

வள்ளத்தில் மிதந்தாலும்
பள்ளத்தில் தான்
எம் வாழ்க்கை நிலை..

பேரலை கண்டாலும்
உன் பாசத்தை
மீறலை....
கலம் கண்ட
குலம் நாங்கள்... எங்கள்
நலன்
உன் கையில் அம்மா...

தேக்கினை தேகமாய்
கொண்ட எம் மக்களின்
ஆக்கினை தீர்ப்பாய் என்ற
வாக்கினை தந்து விடம்மா...

உன் பொற் பாத கமலத்தில்...
பூக்களாய்
நிற்கிறேன்...
பூவோடு சேர்ந்து நானும்....

கமல லியோனா, நெல்லை.





# தங்கத் தேர்ப் பெருவிழா தொடர்பான அறிவிப்புகள்




**1. தெருக்களை ஆயத்தப்படுத்துதல்**

★ பின்வரும் நாட்களில் பவனி நடைபெற இருக்கிற தெருக்களை சுத்தமாகவும், போதிய வெளிச்சமாகவும் வைத்து கொள்ளவும். கட்டிட பணிகள் நடைபெற்றால், கட்டுமான பொருட்களை அகற்றவும்.

★ 25-07-2023 செவ்வாய் - கொடிப் பவனி

30-07-2023 ஞாயிறு - நற்கருணைப் பவனி

05-08-2023 சனி - தங்கத் தேர்ப் பவனி

**2. புதுநன்மை பெறுவோர்**

புதுநன்மை பெறுவோருக்கான சிறப்புப் பயிற்சிகள் 28-07-2023 வெள்ளி, 29-07-2023 சனி இரு நாட்களிலும் மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை நேவிஸ் அரங்கத்தில் நடைபெற உள்ளன. தவறாது கலந்து கொள்ளவும்.

**3. அலுவலகப் பணிகள்**

★ பெருவிழா நாட்களில் பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள் வழங்கப்பட மாட்டாது.

★ நோயில்பூசுதல், அடக்கம் போன்ற அவசரப் பணிகள் தவிர அலுவலகப் பணிகளுக்காக பங்குத்தந்தையரையோ, பங்கு அலுவலகத்தையோ அணுக வேண்டாம்.

**4. நேர்ச்சை பால் வழங்குபவர்கள்**

பெருவிழா நாட்களில் நேர்ச்சை பால் வழங்குபவர்கள் கொடிமர வளாகத்தில் மட்டுமே வழங்க கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பேராலய வளாகத்திற்குள் கூடாது.

**5. பிளாஸ்டிக் தடைக்கு ஒத்துழைப்பு**

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து பனிமய அன்னைப் பெருவிழாவை “பிளாஸ்டிக் இல்லாத விழாவாக” கொண்டாட முன் வருவோம். எனவே, பிளாஸ்டிக் குவளைகள், பிளாஸ்டிக் பைகள், ஸ்ட்ரா, பிளாஸ்டிக் குடிதண்ணீர் பாட்டில் ஆகியவை பேராலய வளாகத்திற்குள் தடை செய்யப்படுகின்றன. அனைவரும் ஒத்துழைப்பு தாருங்கள்.

**6. பிற மத பக்தர்களுக்கு வரவேற்பு**

பெருவிழா நாட்களில் பனிமய அன்னையைத் தரிசிக்க வருகின்ற பிற சபை, பிற சமயங்களைச் சேர்ந்த சகோதர, சகோதரிகளை வரவேற்று அவர்களுக்கு ஒத்துழைப்பும், முன்னுரிமையும் கொடுத்து, “பனிமயத்தாய் எல்லாருக்கும் தாய்” என்பதை எண்பிப்போமாக!



# தங்கத் தேர் 2023 மைல் கற்கள் – 4



**39. தேரோடும் வீதிகள் ஆய்வு.** கடந்த 09.05.2023 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாண்புமிகு அமைச்சர் கீதா ஜீவன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்தபடி, 16.06.2023 அன்று மாலையில் மாண்புமிகு அமைச்சர் கீதா ஜீவன், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் செந்தில்ராஜ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமிகு. பாலாஜி சரவணன் ஆகியோர் பேராலயம் வந்து முதலில் தேர்ப்பிறைக்குள் இருந்த புதிய தேரைப் பார்வையிட்டனர். தொடர்ந்து, தேரோடும் வீதிகளில் நான்கு இடங்களில் ஆய்வு செய்து, உரிய பரிந்துரைகளை ஆணையிட்டனர்.

**40. ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கலந்தாய்வு.** தேரோடும் வீதிகளை ஆய்வு செய்தபின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாண்புமிகு அமைச்சர் தலைமையில் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் அனைத்துத் துறை அலுவலகர்களும் கலந்துகொண்டனர். பேராலயத்தின் சார்பாகப் பங்குத் தந்தை குமார்ராஜா மற்றும் பங்கு மேய்ப்புப் பணித் துணைத் தலைவர், செயலர், இணைச் செயலர், பொருளாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**41. புதிய சப்பரங்கள்.** பெரியவர்களின் பரிந்துரைப்படி, முதற்சனிக்கிழமை சப்பரம், பெருவிழாச் சப்பரம் இரண்டையும் புதிதாகச் செய்துவிடலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் 25.06.2023 அன்று தச்சர்களால் தொடங்கப்பட்டன.

**42. தங்கத் தேர் தொடர்பான இரு செப வழிபாடுகள்.** 01.07.2023 முதல் சனி அன்று காலை 10.00 மணிக்குத் தேர்ப் பிறையில் பங்குத் தந்தையின் தலைமையில் நடைபெற்ற இறைவேண்டலைத் தொடர்ந்து, அலங்கரிக்கப்பட்ட தூண்கள் தேரில் பொருத்தப்படும் பணி தொடங்கியது. அதைத் தொடர்ந்து, ஜெயா எஞ்சினியரிங் அலுவலகத்தில் நடைபெற்ற நன்றி இறைவேண்டலைத் தொடர்ந்து, புதிதாகச் செய்யப்பட்ட நான்கு தேர்ச் சக்கரங்களும் லேத் வேலைகள் நிறைவுற்று தேர்ப் பிறைக்குக் கொண்டுவரப்பட்டன.

**43. தேரோடும் வீதிகளில் சப்பரப் பவனி.** ஜூலை 01 முதல் சனியன்று மாலைத் திருப்பலி 05.00 மணிக்கு நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து, தேரோடும் வீதிகளில் அன்னையின் திருவுருவும் சப்பரத்தில் பவனியாக எடுத்துச்செல்லப்பட்டது. பெருந்திரளான மக்கள் பங்கேற்ற இப்பவனியில் தங்கத் தேர் ஆசிகளுக்காக

சிறப்பு வேண்டுதல்கள் ஏறெடுக்கப்பட்டன. இப்பவனிக்காகக் காவல்துறையிடம் சிறப்பு அனுமதி பெறப்பட்டிருந்தது.

44. **மரியன்னை மாநாடு.** தங்கத் தேர்ப் பெருவிழா ஆயத்த நிகழ்வுகளில் ஒன்றாக **02.07.2023** ஞாயிறு காலை **10.30** முதல் மாலை **04.30** வரை ஸ்நோ அரங்கில் மரியன்னை மாநாடுணி நடைபெற்றது. அருள்பணி. ஜோ சகாயம் இறைவேண்டலோடு மாநாட்டைத் தொடங்கி வைக்க, அருள்தந்தையர் ஜான் செல்வம், லெரின் டிரோஸ், ஸ்டார்வின், ரஞ்சித்குமார், உபர்ட்டஸ், ஜெகதீசன், ஜான் சுரேஷ் ஆகியோர் மரியன்னையின் மேன்மைகள் மற்றும் மரியியல் ஆன்மிகம் பற்றி அருளுரைகள் வழங்கினர். அருள்பணி. பிரதிபன் லிபோன்ஸ் தலைமையில் மரியன்னைப் பாடல்களைப் பாடப்பட்டன. தூத்துக்குடி மாநகரின் அனைத்துப் பங்குகளிலிருந்தும் ஏறக்குறைய **300** பேர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர். மேலும், நேரலையாக உள்ளூர் தொலைக்காட்சிகளிலும், ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும் ஒளிபரப்பப்பட்டதால், திரளானோர் இந்நிகழ்வில் ஊடகப் பங்கேற்றனர்.

## கடந்த 12 மாதங்களாக சரியான விடை எழுதியவர்கள்

### தொடர்ச்சி...

1. லீமா ரோஸ் - பவுலடியார்
2. கிரிஷ் ரீஜோ - சூசையப்பர்
3. மத்யூ கர்டோசா - பொம்பெய் மாதா
4. டென்சி - அன்னை வேளாங்கன்னி
5. வெனிட்டா - காவல்தூதர்
6. சாந்தி ஆல்ட்ரின் - காவல்தூதர்
7. ட்ரினிஷா - காவல்தூதர்
8. ரோஸ்லின் ராஜா - பவுலடியார்
9. லில்டன் கிறிஸ்டி - குழந்தை தெரசா
10. பிருந்தா சார்லஸ் - அந்தோனியார்
11. சரோஜா - அந்தோனியார்
12. பிரின்சி - திவ்ய பாலன்
13. சாண்டினா - லூர்துமாதா



# விவிலியப் போட்டி 103

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## திருப்பாடல் 26 - 36

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. ஆண்டவர் என் ................................ என் ................................
2. ஆண்டவர் என் உயிருக்கு ................................
3. தாம் திருப்பொழிவு ................................ செய்தவர்க்கு அவரே ................................
4. நீரே என் ................................ என்று சொன்னேன்.
5. நீரே எனக்கு ................................ இன்னலினின்று என்னை நீர் பாதுகாக்கின்றீர்.
6. ஆண்டவரே என் ................................
7. நீரே எனக்குத் ................................
8. என் கற்பாறையும் ................................ அவரே

**குறிப்பு : கிடைக்கும் விடைகள் இறைவன் நமக்கு யாராக இருந்து செயல்படுகிறார் என்பது தெரியும்.**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.08.2023**

## விவிலியப் போட்டி 102

**ஜுலை 2023** **விடைக்குறிப்புகள்**

### திருப்பாடல் 20 - 25

| | | |
|---|---|---|
| 1. | கோலும் | திபா 23:4 |
| 2. | யாக்கோபின் | திபா 24:6 |
| 3. | விரும்புவதை | திபா 20:4 |
| 4. | புழு | திபா 22:6 |
| 5. | ஆண்டவரே | திபா 21:13 |
| 6. | நம்பும் | திபா 25:3 |
| 7. | கண்கள் | திபா 25:15 |
| 8. | வாய்மையும், நேர்மையும் | திபா 25:21 |
| 9. | எங்களுக்கு | திபா 20:9 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :



**94893 19976** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 178**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**
**சரியான விடை எழுதியவர்கள் : 110**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

| | | |
|---|---|---|
| 1. | செபமாலை மாதா அன்பியம் | **பிரின்சி** |
| 2. | ஜூடு அன்பியம் | **ட்ரைபேனா** |
| 3. | காவல் தூதர் அன்பியம் | **ஜூலியஸ் தல்மேதா** |
| 4. | குழந்தை தெரசா அன்பியம் | **ஜெரோல்** |

**பாராட்டுக்குரியவர்கள் : 106**

**அந்தோனியார் அன்பியம்**
5. பிருந்தா சார்லஸ்
6. ஜெயா
7. லூக்காஸ் சகாயம்
8. சரோஜா

**அன்னை தெரசா**
9. சுரேஷ் பிரேமா
10. சுகன் மோனிஷா

**அன்னை வேளாங்கன்னி**
11. டென்சி
12. நான்சி
13. ஆரோன் ஷாரோன்
14. ஜூடு
15. ஜொசிற்றா

**கிறிஸ்தரசர்**
16. செலஸ்கி கிளமென்ட்
17. ஜூலியட் சாவியோ
18. ஜெகன் பெமினா
19. லூரட் வசந்த்
20. ரெக்ஸ் கிரீன்வெல்

**தஸ்நேவிஸ் மாதா**
21. ஜெனிட்டா

**திவ்யபாலன் அன்பியம்**
22. சகாயராணி தனராஜ்
23. பிரின்சி

**பாத்திமா மாதா**
24. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
25. ஜெசிந்தா கான்ஸ்டன்
26. ராஜா ரீனா
27. ஜெனிட்டா மைக்கேல்
28. ஆல்வின் அனு

**இரக்கத்தின் மாதா**
29. சித்ரா மோத்தா
30. பிரைட்டன் ஜெரோஃபின்
31. பாப்டிஸ்டா
32. இருதயம்மாள் கொன்சால்

**ஜெபமாலை மாதா**
33. சகாயம்மாள் பெனடிக்ட்
34. கல்யாணி செல்வராஜ்
35. ஸ்நோ அட்ரினா

**ஜூடு அன்பியம்**
36. அந்தோனிசாமி
37. டெரன்சியா அரிஸ்டோ

**காவல்தூதர்**
38. வெனிட்டாள்
39. சார்லட் பிராங்க்
40. பிரிசில்லா
41. ஜெயா அகஸ்டின்
42. ஆரோக்கிய டெய்சி
43. ஜெசிமா கிளாரன்ஸ்
44. சாந்தி ஆல்ட்ரின்
45. ட்ரினிஷா
46. எலிஷா இம்மானுவல்
47. ஜான் ஆல்ட்ரின்

**குழந்தை தெரசா**
48. கிறிஸ்டி லிஸ்டன்
49. பெனி மொறாயிஸ்
50. பெர்லி பென்சன்

**குழந்தை இயேசு**
51. மோனிகா செபாஸ்டின்
52. எமல்டா
53. பிரான்சிஸ் வாஸ்
54. அந்தோனியப்பா பிச்சம்மாள்
55. ஆரோக்கியராஜ் ஹெலினா
56. ரஜூலா ஜான் போஸ்கோ
57. ஃபிலோ கோமஸ்

**லூர்து மாதா**
58. ஜெனோ சேவியர்
59. ரம்யா
60. ரோஸ்லின் தாமஸ்
61. சாண்டினா
62. ஆலிவர் வி. ராயன்
63. சகாயராணி
64. ரஜூலா ஜான் போஸ்கோ
65. ஃபிலோ கோமஸ்

**மணல் மாதா**
66. கெயிற்றன் ஃபர்னான்டோ
67. ரொசாரி கோமஸ்
68. ஹெபிட்டா

**மிக்கேல் அதிதூதர்**
68. ஜோசபின் பர்னாந்து

**பனிமய அன்பியம்**
70. மெர்சி கோமஸ்
71. சுரேஷ் ஆனி
72. ஜூடு ரதி

**பவுலடியார்**
73. ராஜா ரோஸ்லின்
74. லீமா ரோஸ்
75. ஹெலினா
76. ரஸ்கின் வசந்தா

**பரிபூரணமாதா**
77. மெடோனா
78. ஜெனிஷா

**பொம்பெயி மாதா**
79. மாத்யூ கர்டோசா
80. டிஃபானி அண்டோ
81. அந்தோனியம்மாள் மச்சாடோ
82. லூடா கான்ஸ்டன்
83. இம்மானுவேல் சதீஷ்
84. தெரசா பிரகாஷ்

**இராயப்பர்**
85. ஷைனி

**சவேரியார்**
86. டெலிலா அமலன்
87. சகாயம் ஆண்டன்
88. ஜோர்னல் ஜென்சி
89. ரூபா மனுவேல்
90. பிரின்சி ஆக்னஸ்

**செபஸ்தியார்**
91. பிரவீனா
92. ஜெசிலா சேவியர்
93. அஸ்கேவியஸ்
94. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**
95. நேசம்
96. ஜூடி ஆரோக்கியராஜ்
97. டிஜேபிஆர் இராயன்
98. மெடோனா ஜோசப்
99. செல்வி லாசர்
100. ராஜி ஜஸ்டின்

**சிறுமலர் அன்பியம்**
101. செலஸ்டின்
102. விஜி சகாயராஜ்

**சூசையப்பர்**
103. மோனிஷா
104. கிறிஸ் ரிஜோ
105. ரூபி கொர்னேலியுஸ்
106. ஹேமலதா
107. மென்சி

**திருச்சிலுவை**
108. சரோலின் கில்டன்

**வியாகுல மாதா**
109. கெலிண்டன்
110. லூர்து லினட்

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 68

### பரிசு பெறுபவர்கள் : 4

111. தூத்துக்குடி சார்லஸ் கோவில் **சகாயிற்றா மச்சாது**
112. தூத்துக்குடி காந்திநகர் **அன்சிற்றா**
113. ஆறுமுகனேரி **தொம்மை அந்தோனி**
114. பாளையங்கோட்டை **ஜூடு சைமன்**

### பாராட்டுக்குரியவர்கள் : 64

**ஆலந்தலை**
115. சகாயராணி
116. மரியம்மாள்
117. பொன்சேகா

**வீரபாண்டியன்பட்டணம்**
118. ஷாந்தினி

**ஆறுமுகனேரி**
119. ஜெயராணி

**புதியம்புத்தூர்**
120. ஹெலன் அன்னமணி

**சென்னை**
121. கமலஜோதி ஜெயசீலன்
122. ஓஃபிலியா தாமஸ்
123. எட்வர்ட் அமலி

**பாளையங்கோட்டை**
124. பிரேமா குணசீலன்
125. டெனிசா ஃபர்னான்டோ
126. ரோசி ஜெ.
127. ஸ்வர்ணா

**பேட்டை**
128. ஹெலனிட்டா

**கயத்தாறு**
129. அமல்ராஜ்

**பெரியகுளம்**
130. குழந்தை தெரஸ்

**திண்டுக்கல்**
131. ஜெர்மேன்
132. ரொசாலி

**கோயம்புத்தூர்**
133. சகோ. லூக்காஸ்

**பல்லடம்**
134. பிரான்சிஸ் ஆர்லன்

**திருச்சி**
135. மோனிட்டா கிறிஸ்டி
136. டோனி

**மதுரை**
137. சகோ. அப்போலின்

**வடக்குத்து**
138. ஹென்றிதாஸ்

**பரமக்குடி**
139. சீமோன் சாந்தி

**கன்னியாகுமரி**
140. மிக்கேல்

**கனடா**
141. மேரி ஆனி தாமஸ்

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
142. ரமோலா கமிலஸ்
143. ரிமோல்டா
144. ஜேன் கிளைட்டன்
145. ஜூலியட் வாஸ்
146. பெனிட்டா
147. சுசீலன்
148. பினுராய் பர்னாந்து
149. கிரேட்டா ராஜா

**குருஸ்புரம்**
150. ஆசீர்வாதம்
151. பௌவுசி ஜோ மைக்கேல்
152. டெல்ஃபின்
153. பிளசி செல்வராஜன்
154. ஜான்சி மென்டிஸ்
155. ஆசீர்வாதம்
156. டெல்ஃபின்
157. பிளஸ்ஸி செல்வராஜன்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
158. சுகிர்தா
159. ஷெரினா
160. சகாயம்

**யூதா ததேயு கோவில்**
161. ரோஸ் சேவியர்
162. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்

**காந்திநகர்**
163. சாந்தினி
164. ரியாலினோ
165. யூஜினியா

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
166. லிஜியா ஃபர்னான்டோ
167. ஜெசிந்தா ஃபர்னான்டோ
168. ஜூடு தாமஸ்
169. செக்கரியா சாமுவேல்

**இஞ்ஞாசியார்புரம்**
170. அற்புத செல்வி

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
171. விர்ஜின்
172. தயாபர ராணி

**அந்தோனியார் கோவில்**
173. சோஃபியா விஜய்
174. இருதயம்மாள் கபிரியேல்
175. மென்சிலா லொயோலா
176. சுஜாதா மஹேஷ்

**திரேஸ்புரம்**
177. கோல்வின் ஜேசுராஜ்

**பாத்திமா நகர்**
178. ஹேம்லின் விஜய்



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 169**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 178**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 49)

## ஆகஸ்ட் - 2023


| | | |
|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : அருள்பணி சைமன் ஆல்டஸ் | 74485 18127 |
| களப் பணியாளர் | : சகோதரர் ஆல்ட்ரின் | 94893 19976 |
| பங்கு அலுவலகம் | : | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | 82209 47823 |


## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை **5.00, 6.30, 8.00** | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை **9.30** | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை **5.30** | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை **6.30** | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ கூட்டுத் திருமணம் : 20.08.2023
- ✓ உறுதிப்பூசுதல் அருள்சாதனம் : 28.05.2023
- ✓ புதுநன்மை அருள்சாதனம் : 30.07.2023

உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.00 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.

## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

478. தங்கத் தேர் பெருவிழா ஆயத்த நிகழ்வாக 01.07.2023 முதல் சனி அன்று மாலை 05.30 மணிக்கு **சப்பரப் பவனி தேரோடும் வீதிகளில்** நடத்தப்பட்டது. தூத்துக்குடி மாநகரிலிருந்து திரளான மக்கள் பங்கு கொண்ட இப்பவனியில் செபமாலை, மாதா பாடல்கள், தங்கத் தேர் ஆசிகளுக்கான பரிந்துரை மன்றாட்டுகள் ஆகியன இடம் பெற்றன. இரவு 07.15 மணிக்குப் பவனி பேராலயத்தை அடைந்தது. காவல்துறையினரின் ஒத்துழைப்புடன் இப்பவனி நடத்தப்பட்டது. இந்தப் பவனி நேரலையாகவும் ஒளிபரப்பப்பட்டது.

479. தங்கத் தேர்ப் பெருவிழாவின் இன்னொரு ஆயத்த நிகழ்வாக 02.07.2023 ஞாயிறு அன்று ஸ்நோ அரங்கில் காலை 10.30 முதல் மாலை 04.30 வரை தங்கத் தேர் **மரியன்னை மாநாடு** நடைபெற்றது. அருள்பணி. ஜோ சகாயம் மாநாட்டைத் தொடங்கி வைக்க, அருள்பணியாளர்கள் ஜான் செல்வம், லெரின் டிரோஸ், ஸ்டார்வின், ரஞ்சித்குமார், உபர்ட்டஸ், ஜெகதீசன், ஜான் சுரேஷ் ஆகியோர் மரியன்னையின் மேன்மை மற்றும் மரியியல் ஆன்மிகம் பற்றி சிறப்புப் பகிர்வுகளை வழங்கினர். அருள்பணி. பிரதீபன் லிபோன்ஸ் மரியன்னைப் பாடல்களைப் பாடி பங்கேற்பாளர்களை ஊக்குவித்தார்கள். தூத்துக்குடி மாநகரின் அனைத்துப் பங்குகளிலிருந்தும் ஏறக்குறைய 300 பேர் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

480. ஜூலை மாதத்திற்கான விவிலியப் பாசறை (97) **"விவிலிய இறைவேண்டல்கள்"** என்னும் தலைப்பில் 04.07.2023 செவ்வாய் மாலை 06.15 மணிக்கு லூர்துமாதா கெபியில் நடைபெற்றது. அருள்சாதனங்கள் பெறவிருப்போர் உட்பட 71 பேர் கலந்துகொண்டனர்.

481. பனிமய அன்னைப் பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிப்பேரவையின் பொதுக்குழுக் கூட்டம் 07.07.2023 வெள்ளி அன்று நடைபெற்றது. இந்த ஆண்டு பெருவிழாவுக்கான பணிக்குழுக்கள் அறிவிக்கப்பட்டன. பங்கு மக்களுக்குரிய பெருவிழா அழைப்பிதழ் அன்பிய வழிகாட்டிகள் வழியாகக் கொடுத்துவிடப்பட்டன.

482. தங்க முலாம் பூசப்பட்ட **பனிமய அன்னையின் திருச்சுரூபம்** 14.07.2023 வெள்ளி இரவு அடைக்கல அன்னை கன்னியர் இல்லத்திலிருந்து பல்லக்கில் பேராலயத்துக்கு எடுத்து வரப்பட்டு, அன்னையின் சிம்மாசனத்தில் வைக்கப்பட்டது.

483. **"தங்கத் தேர்ப் பெருவிழா ஆசிகளுக்கான" பனிமய நோன்பு வழிபாடு** (33) 15.07.2023 அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது.

484. தங்கத் தேர்ப் பெருவிழா **"கலைப் போட்டிகள்"** 16.07.2023 ஞாயிறு பிற்பகல் 03.00 முதல் மாலை 06.00 நடைபெற்றன. கத்தோலிக்கப் பள்ளி மாணவருக்கான பேச்சுப் போட்டி மற்றும் பாட்டுப் போட்டி இரண்டும் ஜேஎம்ஜே அரங்கில் நடத்தப்பட்டன. கட்டுரைப் போட்டி மற்றும் பொதுமக்களுக்கான தங்கத் தேர் வினா-விடை எழுத்துப் போட்டி லசால் மேல்நிலைப்பள்ளியிலும் நடத்தப்பட்டன. ஏறக்குறைய 230 பேர் கலந்துகொண்டனர்.

485. தங்கத் தேர்ப் பெருவிழா ஆசிகளுக்கான நற்கருணை ஆராதனை நமது பேராலயத்தில் 23.07.2023 ஞாயிறு காலை 10.30 முதல் மாலை 04.30 வரை நடைபெற்றது. பக்த சபைகள் மற்றும் குழுக்கள் இந்த ஆராதனையில் பங்கு பெற்றனர்.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 129. | ரியோ | மெர்வின்-சிபோரா | 02.07.23 | திருச்சிலுவை |
| 130. | ஜோனிக்கா சாண்டா | சேசு அந்தோணி-ரெய்சா | 02.07.2023 | அன்னை தெரசா |



### *ஆசி கூறுகின்றோம்*

### 2. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | திருமணநாள் |
|---|---|---|---|
| 117. | ஜீகன் - பொபில்னா | குழந்தை இயேசு | 05.07.2023 |
| 118. | விகாஷ் - மேத்லின் | சூசையப்பர் | 06.07.2023 |
| 119. | ஷெரான் - வாலண்டினா | சவேரியார் | 07.07.2023 |



### *இறைவனைப் போற்றுகிறோம்*

### 3. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 34 | ஃபெலிக்ஸ் | சிலுவை அந்தோணி | 05.07.2023 | பரிபூரண மாதா |
| 35 | ஜோசப்பின் ஜெகதா | ஜோசப் டெரன்ஸ் | 07.07.2023 | குழந்தை தெரசா |



### *செபிக்கின்றோம்*

### 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 161. | ரொசிட்டா பர்னாந்து | ஆரோக்கியசாமி | 27.06.2023 | அன்னை தெரசா |
| 162. | பெலிக்ஸ் | ஜெசிந்தா | 12.07.2023 | பரிபூரண மாதா |

## நடைபெற இருப்பவை

- ★ 19.08.2023 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (34)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை "கூட்டுத் திருமண மணமக்களின் ஆசிகளுக்காக" நடைபெறும்.

- ★ தூத்துக்குடி மறைமாவட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டும், பனிமய அன்னையின் தங்கத் தேர்ப் பெருவிழாவை முன்னிட்டும், தூத்துக்குடி மறைமாவட்டம் முழுவதிலுமிருந்து முன் வந்த **25 ஜோடி மணமக்களுக்கு** மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை அவர்களின் தலைமையில் 20.08.2023 ஞாயிறு மாலை 04.00 மணிக்கு **கூட்டுத் திருமணம்** நடைபெறும். தொடர்ந்து, தங்கத் தேர் வளாகத்தில் மணமக்களுக்கு வரவேற்பு நிகழ்வும், அதன்பின் ஸ்நோ அரங்கில் மணமக்கள் மற்றும் விருந்தினர்களுக்கான மண விருந்தும் நடைபெறும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண் | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| | 01.08.2023 | செவ்வாய் | பனிமய அன்னையின் தங்கத் தேர்ப் பெருவிழாவை முன்னிட்டு வழிபாடு நடைபெறாது | |
| 137 | 08.08.2023 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | அன்னை மரியா நம் மாதிரி |
| 138 | 15.08.2023 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | அன்னை மரியா விடுதலையின் தாய் |
| 139 | 22.08.2023 | செவ்வாய் | அருள்பணி. மார்ட்டின் குமார் | அன்னை மரியா தாழ்ச்சியின் தாய் |
| 140 | 29.08.2023 | செவ்வாய் | அருள்பணி. ஜெரால்டு ரவி | அன்னை மரியா உறவின் தாய் |



# பனிமய சாட்சியம்

**பனிமய சாட்சியம் : 76**

## யாழினி மிஸ்டிகா, சென்னை

திரு. பிரவீன், அனிதா - சென்னை பல்லாவரம் புனித சூசையப்பர் பங்கைச் சேர்ந்தவர்கள். திருணம் ஆகஸ்ட் 2020. தாய் அனிதா கருவுற்று குழந்தை பிறப்பதில் சிக்கல் இருப்பதாக மருத்துவர்கள் சொன்னார்கள். 8 மணி நேரம் வலியால் துடித்தார்கள். அப்போது ஒருவர் பனிமயத் தாயிடம் மன்றாடுங்கள் என்று சொல்ல, பெற்றோர் பனிமய அன்னையிடம் குழந்தை நலமாகப் பெற்றெடுக்க வேண்டுமென்று மன்றாடினார்கள். மாதாவின் பரிந்துரையால், 8 மணி நேரத்திற்குப் பிறகு குழந்தை நலமாகப் பிறந்தாள். அன்று ஆகஸ்ட் 4 ஆம் நாள். பனிமயத் தாயின் பெருவிழா மாலை ஆராதனை. தற்பொழுது பெற்றோரும், தாத்தா, பாட்டியுடன் பேராலயம் வந்து, பனிமய அன்னைக்கு நன்றி செலுத்தி, குழந்தையின் பெயரால் ஒரு சேலையைக் காணிக்கையாக வழங்கினர்.

**பனிமய சாட்சியம் : 77**

## இன்னோசென்ட் – வர்ஷா, தூத்துக்குடி

இன்னோசென்ட் வர்ஷா தம்பதியருக்கு 2021 ஜூலை மாதம் திருமணம் நடைபெற்றது, குழந்தைப் பேறு தட்டிக்கொண்டே போனது. எனவே, கடந்த 2022 டிசம்பர் மாதம் நடைபெற்ற "குழந்தைச் செல்வத்துக்கான" பனிமய நோன்பு வழிபாட்டில் இருவரும் தம்பதியாகக் கலந்துகொண்டு அன்னையிடம் மன்றாடினர். பனிமயத் தாயின் வல்லமை மிக்கப் பரிந்துரையால் திருமதி. வர்ஷா டிசம்பர் மாதத்திலேயே தாய்மைப் பேறு அடைந்தார். ஜனவரி மாதம் மகப்பேறு மருத்துவரைச் சந்தித்தபோது, இச்செய்தியை அவர் உறுதிப்படுத்தினார். பனிமயத் தாயின் திருக்கோவிலுக்குத் தம்பதியராக வந்து நன்றி செலுத்தினர். அவர் கணவர் இன்னோசென்ட் 21.05.2023 அன்று நடைபெற்ற "குழந்தைச் செல்வத்துக்கான" பனிமய நோன்பு வழிபாட்டில் சாட்சி பகர்ந்தார். நன்றியின் காணிக்கையாக பங்கேற்பாளர்களுக்கு மாதுளம் பழங்களை வழங்கினார்.

**பனிமய சாட்சியம் : 78**


## ஜூலி, கரூர்

இந்த வருடம் மார்ச் மாதம் எனது நெருங்கின சொந்தமான தங்கைக்கு கேன்சர் நோய் உள்ளது என்று கண்டறியப்பட்டது. உயிர்ப்புப் பெருவிழாவிற்கு முன்தான் தெரிய வந்தது. நாங்கள் நிறைய இடங்களில் ஆய்வு செய்தும் சந்தேகப்படும்படியாக இல்லை என்று சொன்னவர்கள், திடீரென இப்படிக் கூறிவிட்டார்கள். எல்லோருக்கும் மிகுந்த மனவேதனை. எங்களால் யாரிடமும் சொல்லி அழக்கூட முடியவில்லை. நாங்கள் மாதாவிடம்தான் தினமும் திருப்பலிக்கு வந்துவேண்டிக் கொண்டோம். அவளுக்கு இரத்தப் புற்றுநோய். அதனால் மாதவிடாயும் நிற்கவில்லை. மருத்துவ சோதனையில் கர்ப்பப்பையிலும் எந்தக் குறையுமில்லை என்று கூறி விட்டார்கள். அவள் சோர்ந்துவிட்டாள். நாங்கள் மாதாவிடம் மட்டும்தான் வந்து நின்றோம். அன்னையை வேண்டிக் கொண்டோம். இப்பொழுது அவள் தெரபி எடுத்துக் கொண்டிருக்கிறாள். நலமாக இருக்கிறாள். நல்ல சுகம் பெற்று வருவதற்காக அன்னை மரியாவுக்கும், இயேசுவுக்கும் நன்றி.

மரியே, மாதாவே, தாயே நீ வாழ்க!

# எம் அன்புப் பெற்றோர் மற்றும் சகோதரி நினைவு

| 49–ஆம் ஆண்டு | 67–ஆம் ஆண்டு | 6–ஆம் ஆண்டு |
|---|---|---|
| **M. தாமஸ் மஸ்கரனாஸ்** | **T. பாத்திமா மஸ்கரனாஸ்** | **T. சம்மனஸ் அம்மாள் மஸ்கரனாஸ்** |
| 16.07.1974 | 16.11.1956 | 16.06.2017 |



பிரிவால் துயருறும்

**Rev. Fr. டெரன்ஸ் மஸ்கரனாஸ் SVD (HONG KONG)**

<u>மக்கள்</u>

ஜெசிந்தா மஸ்கரனாஸ்
பிரான்சிஸ் மஸ்கரனாஸ்
வெனிட்டாள் மஸ்கரனாஸ்
இருதயராஜ் மஸ்கரனாஸ்
ஜோசப் மஸ்கரனாஸ்

<u>மருமக்கள்</u>

L.R.P. ராயன்
ஜூலியட் பிரான்ஸிஸ்

சரோ ராஜ் மஸ்கரனாஸ்
சார்லெட் ஜோசப் மஸ்கரனாஸ்

பேரன்கள், பேத்திகள், பூட்டன்கள், பூட்டிகள்

அன்னை இல்லம், No. 1, பெரிய கோயில் தெரு, தூத்துக்குடி.
Mobile : 95663 28215

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

"நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்"

(தொநூ 12:2)



பிறப்பு
**01.01.1940**

இறப்பு
**10.08.2020**

வயது : 80

# ரமணி நேவிஸ் பர்னாந்து

[ W/o. மரிய நேவிஸ் பர்னாந்து (Late) ]

**என்றும் உங்கள் நினைவில் வாழும்**

**மக்கள், மருமக்கள், பேரன்கள், பேத்திகள்**

## தூத்துக்குடி

# தூய பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்



### ஏழுகடல் துறையுடன் எல்லார்க்கும்
### ஏக அடைக்கலத் தாய்
### திவ்விய சந்த மரிய தஸ்நேவிஸ் மாதாவின்

# 16ஆவது மகா மகோன்னத தங்கத் தேரோட்டப் பெருவிழா அறிக்கை

**"இவரே உம் தாய்"** (யோவா 19:27)

| | | | | |
|---|---|---|---|---|
| 25.07.2023 | செவ்வாய் | மாலை | 06.00 | சிறப்பு காணிக்கைப் பவனி |
| 26.07.2023 | புதன் | காலை | 07.00 | சிறப்புத் திருப்பலி, கொடியேற்றம்<br>தலைமை : மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை. தூத்துக்குடி |
| | | நண்பகல் | 12.00 | அன்னைக்குப் பொன் மகுடம் அணிவித்தல்<br>தலைமை : மேதகு நசரேன் ஆண்டகை |
| 30.07.2023 | ஞாயிறு | காலை | 07.30 | புதுநன்மைத் திருப்பலி<br>தலைமை : மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை |
| | | மாலை | 06.15 | செபமாலை, நற்கருணைப் பவனி, மறையுரை, நற்கருணை ஆசீர்<br>தலைமை : மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை |
| 04.08.2023 | வெள்ளி | மாலை | 07.00 | பெருவிழா மாலை ஆராதனை<br>தலைமை : மேன்மைமிகு கர்தினால் பிலிப் நேரி |
| | | இரவு | 09.00 | பேராலய வளாகத்தில் அன்னையின் திருவுருவப் பவனி |
| 05.08.2023 | சனி | காலை | 04.30 | முதல் திருப்பலி - அருள்பணி. குமார்ராஜா |
| | | காலை | 05.15 | பெருவிழா கூட்டுத் திருப்பலி<br>தலைமை : மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை |
| | | காலை | 07.00 | தங்கத் தேர் சிறப்புத் திருப்பலி<br>தலைமை : மேன்மைமிகு கர்தினால் பிலிப் நேரி<br>**அன்னையின் தங்கத்தேர்ப் பவனி**<br>அர்ச்சிப்பு : மேதகு ஆயர் தாமஸ் அக்குவினாஸ்<br>மேதகு ஆயர் இம்மானுவேல் ஃபர்னான்டோ |
| | | நண்பகல் | 12.30 | தங்கத் தேர் நன்றித் திருப்பலி<br>தலைமை : மேதகு ஆயர் தாமஸ் அக்குவினாஸ், கோயம்புத்தூர் |
| | | மாலை | 03.00 | செபமாலை, அருளிக்க ஆசீர் |
| | | மாலை | 04.00 | பெருவிழா நிறைவுத் திருப்பலி<br>- மேதகு ஆயர் இம்மானுவேல் ஃபர்னான்டோ, மன்னார், இலங்கை |
| | | மாலை | 06.00 | தங்கத்தேர் நன்றி விழா |
| | | இரவு | 07.00 | புனித பனிமய அன்னைக்குக் குடும்பங்களை ஒப்புக் கொடுத்தல் |

**நவநாட்களில்**

| | | |
|---|---|---|
| காலை | 04.30 | : செபமாலை - தொடர்ந்து திருப்பலிகள் |
| மாலை | 03.00 | : செபமாலை, மறையுரை, அருளிக்க ஆசீர் (தேர்ஸ்) |
| இரவு | 07.15 | : செபமாலை, பிரார்த்தனை, நற்கருணை ஆசீர் |

*அன்னையின் பிள்ளைகள் அனைவரையும் அன்புடன் அழைக்கும்*

அருள்முனைவர் குமார் ராஜா, பங்குத்தந்தை
அருள்பணி. சைமன் ஆல்டஸ், உதவிப் பங்குத்தந்தை
அருள்சகோ. ஆல்ட்ரின்

பங்கு மேய்ப்புப் பணிக்குழு
துறவியர், பக்த சபையினர், இறைமக்கள்

Ph. 0461-2320854, 8220947823 www.snowsbasilica.com

SHINY Ph : 98421 31493